அப்பா உம் கிருபைகளால்
என்னை காத்து கொண்டீரே
அப்பா உம் கிருபைகளால்
என்னை அணைத்து கொண்டீரே

1. தாங்கி நடத்தும் கிருபை இது
தாழ்வில் நினைத்த கிருபை இது – 2
தந்தையும் தாயும் கைவிட்டாலும்
தயவாய் காக்கும் கிருபை இது – 2

2. வியாதியின் நேரத்தில் காத்த கிருபை
விடுதலை கொடுத்த தேவ கிருபை – 2
சூழ்நிலைகள் மாறினாலும்
மாறாமல் காத்திட்ட தேவ கிருபை – 2

3. கஷ்டத்தின் நேரத்தில் காத்த கிருபை
கண்ணீரை மாற்றின தேவ கிருபை – 2
தடைகள் யாவையும் உடைத்து எறிந்து
வெற்றியை தந்திட்ட தேவ கிருபை – 2